# நபி வழியில் நம் உம்ரா

## எளிதான ஒரு வழிகாட்டல்

## தொகுப்பு: அஸ்ஹர் யூஸுஃப் ஸீலானி


"ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காகப் பூர்த்தி செய்யுங்கள்". (2: 196).

ஒவ்வொருவரும் தனது உம்ராவை அல்லாஹ்வுக்காக என்ற தூய உள்ளத்துடன் நபி வழியைப் பின் பற்றி அமைத்துக் கொள்ளும் போதுதான் அல்லாஹ்விடம் ஒப்புக் கொள்ளப்பட்ட உம்ராவாக அது மாறும்.

"ஓர் உம்ரா செய்வது மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களின் பரிகாரமாகும்" என்பது நபி மொழியாகும் (புஹாரி 1773).

உம்ரா என்பது இஹ்ராம், தவாப், ஸஃயி, தலை முடி மழித்தல், அல்லது குறைத்தல் ஆகிய செயல்களையுடைய ஒரு வணக்கமாகும்.

**உம்ரா மற்றும் ஹஜ்ஜுக்காக நிய்யத் வைக்கும் எல்லைகள்:**




மதீனாவாசிகளுக்கு துல்ஹுலைஃபா, ஷாம் வாசிகளுக்கு ஜுஹ்பா, நஜ்த் வாசிகளுக்கு கர்னுல் மனாஸில், யமன் வாசிகளுக்க யலம்லம், இராக் வாசிகளுக்கு தாது இர்க், இந்த எல்லைகளில் ஏதாவது ஒன்றை கடந்து செல்பவர்களுக்கு அதுவே அவர்களது எல்லையாகும். எல்லைகளுக்குள் வசிப்பவர்கள் வசிக்கும் இடத்திலே உம்ராவுக்காக இஹ்ராம் செய்து கொள்வார்கள்.

இஹ்ராமுக்கு முன் செய்ய வேண்டிய ஸுன்னத்துகள் :

1- குளித்தல். மாத விடாய், மகப்பேற்றுடைய பெண்களாக இருந்தாலும் சரி.

2- தாடிக்கும், தலைக்கும் மணம் பூசிக்கொள்ளுதல் (இஹ்ராம் உடைக்கு பூசக்கூடாது).

உம்ராவின் கடமைகள்:

1- இஹ்ராம்:

உம்ராவுக்காக நிய்யத் வைத்து இஹ்ராமுக்குள் நுழைவதாகும்.

الْحَمْدُ لِلَّهِ وَسُبْحَانَ اللهِ وَاللَّهُ أَكْبَرُ (புஹாரி 1551)

எனக் கூறி மனதால் நிய்யத் வைப்பதாகும்.

நிய்யத் வைக்கும் முறை: لَبَّيْكَ عُمْرَةً

"லப்பைக உம்ரதன்"

வாகனத்தில் அமர்ந்து, கிப்லாவை முன்னோக்கி நிய்யத்து வைத்துக்கொள்ளல்.

அச்சத்தினால் அல்லது ஏதேனும் நோயினால் ஹஜ் அல்லது உம்ராவுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று கருதுபவர்கள் முன் நிபந்தனையிட்டு,

اللَّهُمَّ مَحِلِّي حَيْثُ حَبَسْتَنِي

"இறைவா! நீ எந்த இடத்தில் (ஹஜ்ஜின் கிரியைகளைச் செய்ய முடியாதவாறு) என்னைத் தடுக்கிறாயோ அதுதான் நான் இஹ்ராமிலிருந்து விடுபடும் இடமாகும்" என்று நிய்யத் வைக்கும்போது கூறிக் கொள்ளலாம்.

இஹ்ராமுக்கென ஒரு சிறப்புத் தொழுகை கிடையாது. பெண்கள் தங்கள் இஹ்ராமில் முகத்தையும், மணிக்கட்டுகளையும் திறந்து கொள்ள வேண்டும். பெண்களின் இஹ்ராம் குறிப்பிட்ட நிறத்தில்தான் இருக்க வேண்டும் என எந்த நிபந்தனையும் இல்லை.

நிய்யத் வைத்ததன் பின் ஹரமை வந்தடையும் வரை தல்பியா கூறவேண்டும்.

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ لاَ شَرِيكَ لَكَ لَبَّيْكَ إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ
وَالْمُلْكَ لاَ شَرِيكَ لَكَ

தல்பியா: "லப்பைகல்லாஹும்ம லப்பைக் லப்பைக லாஷரீக லக லப்பைக் இன்னல் ஹம்த வன்னிஃமத லக வல்முல்க் லாஷரீக லக்

நாயனே! உன் அழைப்பை ஏற்று வந்துவிட்டேன். நாயனே! உன் அழைப்பை ஏற்று வந்துவிட்டேன். நாயனே! உனக்கு நிகராக எவருமில்லை; உனக்கு இணையாக எதுவுமில்லை. நாயனே! உன்னிடமே வந்துவிட்டேன். நிச்சயமாக புகழ், அருள், ஆட்சி அனைத்தும் உனக்கே உரியன. உனக்கு யாதொரு இணையுமில்லை.

மக்காவில் நுழைவதற்கு முன் குளித்துக் கொள்வது ஸுன்னத்தாகும்.

கஃபா ஆலயத்தை அடைந்ததும் ஏனைய இறையில்லங்களில் நுழையும்பொழுது வலது காலை முன் வைத்து நபிகளார் (ﷺ) அவர்கள் கற்றுத்தந்த துஆக்களில் ஏதாவது ஒன்றை ஓதுவது போன்று கஃபாவில் நுழையும் போதும் ஓதிக் கொள்வது. இதற்கென்று சிறப்பு துஆக்கள் ஏதையும் நபிகளார் (ﷺ) அவர்கள் கற்றுத் தரவில்லை.

اللَّهُمَّ افْتَحْ لِى أَبْوَابَ رَحْمَتِكَ


அல்லாஹும்மஃப்தஹ்லி அப்வாப ரஹ்மதிக (முஸ்லிம் 1685).

**2- தவாஃப் :**

தவாஃப் என்பது புனித கஃபாவை ஏழு முறை சுற்றுவதாகும். தவாஃபை ஆரம்பிக்கும் போது ஆண்கள் வலது புஜத்தை திறந்தவர்களாக, ஹஜருல் அஸ்வதை கல்லை முத்தமிட்டு, அதற்கு முடியாவிட்டால் கையால் தொட்டு கையை முத்தமிட்டு, அதற்கு முடியாத போது கைத்தடி போன்றவற்றால் அதைத் தொட்டு கைத்தடியை முத்தமிட்டு, அதற்கும் முடியாவிட்டால் தமது கையினால் அதன் பக்கம் சைகை செய்ய வேண்டும். சைகை செய்யும் போது கையை முத்தமிடக்கூடாது. ஹஜருல் அஸ்வத் கல்லைத் தொடும்போது அல்லது அதன் பக்கம் சைகை செய்யும் போது

اللّـــهُ أَكْـبَـرُ

"அல்லாஹு அக்பர்" என கூற வேண்டும். அல்லாஹ் மிகப் பெரியவன்.




பின்னர் கஃபதுல்லாவை தனது இடப்பக்கமாக்கி தவாபைத் தொடங்க வேண்டும். இந்த ஏழு சுற்றுக்களில் முதல் 3 சுற்றுக்களில் ஆண்கள் மாத்திரம் வேகமாக நடந்தும், பாதங்களை நெருக்கி வைத்தும் நடக்க வேண்டும். இதற்கு அரபியில் "ரமல்' என்று கூறப்படும். ஏனைய 4 சுற்றுகளையும் நடந்து செய்ய வேண்டும். ருக்னுல் யமானியை அடையும்போது முடியுமாயின் அம்மூலையைத் தொட்டவராக அதற்கு முடியாது போது அதன் பக்கம் சைகை செய்வதோ, தக்பீர் கூறுவதோ கூடாது. ருக்னுல் யமானிக்கும் 'ஹஜருல் அஸ்வத் கல்லுக்கும் இடையே பின்வரும் துஆவை ஓதவேண்டும்.

visit www.islamkalvi.com

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

"ரப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபன்னார்" எங்கள் நாயனே! இம்மை, மறுமை இரண்டிலும் நன்மையை அருள்வாயாக. மேலும், நரக வேதனையிலிருந்தும் எங்களைக் காப்பாற்றுவாயாக!

இதைத் தவிர தவாபின் போது வேறெந்த சிறப்பு துஆவும் கிடையாது, நீங்கள் விரும்பிய துஆக்களை தாழ்ந்த குரலில் கேட்டுக் கொள்ளலாம் நபி (ﷺ) அவர்கள் இரண்டு மூலைகளைத் தவிர கஃபாவில் வேறெந்த இடத்தையும் தொடவில்லை. ஒவ்வொரு சுற்றிலும் ஹஜ்ருல் அஸ்வதை அடையும் போது நிறைவடையும். அடுத்த சுற்றை ஆரம்பிக்கும் போது ஹஜருல் அஸ்வதின் பக்கம் சைகை செய்து அல்லாஹு அக்பர் எனக் கூறி ஆரம்பிக்க வேண்டும்.

### தவாபுக்குப் பின் 2 ரக்அத்தொழுகை:

தவாப் செய்து முடித்தவுடன் வலது புஜத்தை மூடிக்கொள்ள வேண்டும். வலது புஜம் திறந்திருப்பது தவாஃபில் மாத்திரமே. மகாம் இப்ராஹீமில் அல்லது சனக்கூட்டம் அதிகமாக இருப்பின் கஃபாவின் ஏதாவது ஒரு இடத்தில் நின்று 2 ரக்அத்துகள் தொழ வேண்டும். முதலாவது ரக்அத்தில் பாத்திஹா ஸூராவையும், குல்யா அய்யுஹல் காபிருனையும் இரண்டாவது ரக்அத்தில் பாத்திஹா ஸூராவையும், குல்குவல்லாஹு அஹதையும் ஓத வேண்டும். தொழுகையை முடித்த பின் முடியுமாயின் ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிட வேண்டும். முடியாத பொது அதன் பக்கம் சைகை செய்வது இந்த இடத்தில் கூடாது. பின் "ஸம் ஸம்" நீரைக் குடிப்பது ஸுன்னத்தாகும்..

### 3. ஸஃயி செய்தல் - ஸஃபா, மர்வாவுக்கிடையில்:

பின்னர், ஸபாவிற்கு வந்து அதை நெறுங்கியவுடன் இந்தக் குர்ஆன் வசனத்தை ஓதிக் கொள்ள வேண்டும்.


إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِن شَعَآئِرِ اللَّهِ

"இன்னஸ் ஸபா வல் மர்வத மின் ஷஆஇரில்லாஹ்" நிச்சயமாக ஸபா, மர்வா (என்னும் மலைகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் நின்றும் உள்ளன.

ஸபா மலையின் மீதேறி கஃபாவை பார்த்தவராக இரு கரமேந்தி பிரார்த்திக்க வேண்டும்.

اللَّهُ أَكْبَرُ اللَّـــهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ

لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ أَنْجَزَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الأَحْزَابَ وَحْدَهُ




"அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரிகலஹு லஹுல் முல்கு வலகுல் ஹம்து வஹுவ அலாகுல்லிஷையின் கதீர் 'லாயிலாக இல்லல்லாஹுவஹ்தா, அன்ஜஸ வஹ்தா, வனஸ்ர அப்தஹ், வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹ் " என்று 3 முறை ஓதவேண்டும்.

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியும், புகழும் அவனுக்கே உரியது. அவன் யாவற்றின் மீதும் ஆற்றலுடையவன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அல்லாஹ் தனது வாக்கை நிறைவேற்றி அவன் தனது அடியார் நபிகளார் (ﷺ) அவர்களுக்கு வெற்றியை அளித்தான். அவன் தனித்தவனாக தனது எதிரிப் படைகளைத் தோற்கடித்தான்.

பின்னர் மர்வாவை நோக்கி செல்ல வேண்டும். மர்வாவை அடைந்ததும் கஃபாவை முன்னோக்கி இரு கரமேந்தி பிரார்த்திக்க வேண்டும். ஸபாவில் மூன்று முறை ஓதிய திக்ரை மாத்திரம் மர்வாவிலும் ஓதிக் கொள்ள வேண்டும். அல்குர்ஆன் வசனத்தை அல்ல. ஸஃயி செய்யும் போது விரும்பிய திக்ர், துஆக்களை ஓதிக்கொள்ளலாம். இதற்கென்று விசேடமாக எந்த துஆவும் இல்லை.

குறிப்பு: ஸஃயின் போது பச்சை நிற விளக்குகளுக்கு மத்தியில் ஆண்கள் மாத்திரம் வேகமாக ஓட வேண்டும். இவ்வாறு ஏ முறை ஸஃயி செய்ய வேண்டும். ஸபாவிலிருந்து மர்வாவிறற்கு செல்வது ஒரு சுற்றாகும்., இறுதியில் மர்வாவில்தான் ஸஃயி பூர்த்தியடையும். ஸஃயி செய்த பின் எந்தத் தொழுகையும் இல்லை. பலர் இந்தத் தவறை செய்வதை இன்று பார்க்க முடிகின்றது. அங்கு கத்திரிகளை வைத்திருப்பவர்களிடம் உங்கள் முடிகளை அங்கு மிங்குமாக கொஞ்சம் வெட்டிக் கொள்வது உங்கள் உம்ராவை பூர்த்தியாக்காது. எனவே அதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்.

4. ஸஃயியை முடித்த பின் தலைமுடியை மழித்தல் அல்லது குறைத்தல்: தலை முடியை மழிப்பதே சிறந்தது ஏனெனில் நபியவர்கள் அவர்களுக்காக 3 முறை பிரார்த்தித்தார்கள். குறைப்பவர்களுக்கு நபித் தோழர்கள் கேட்ட போது இறுதியாகத்தான் பிரார்த்தித்தார்கள். (புஹாரி 1728).

பெண்கள் தம் முடிகளிலிருந்து விரல் நுனி அளவு வெட்டிக் கொள்வார்கள். இத்துடன் ஒருவர் இஹ்ராமிலிருந்து வெளியேறுவார், இஹ்ராமின் போது தடுக்கப்பட்ட அனைத்தும் அவருக்கு அனுமதிக்கப்படும். ஆனால் புனித ஹரம் எல்லையில் தடுக்கப்பட்டவைகள் அந்த எல்லைக்குள் இருக்கும் வரை அனைவரும் பேண வேண்டியவை ஆகும்.

### இஹ்ராமில் தடுக்கப்பட்டவை:

1.தலைமுடி உட்பட உடலின் ஏனைய பாகங்களிலுள்ள முடிகளை நீக்குதல்.

2. நகங்களை வெட்டுதல்.

3 வாசனைப் பொருட்களைப் பயன்படுத்துதல்.

4. உடலுறவுகொள்ளுதல், முத்தமிடுதல்.

5. திருமண ஒப்பந்தம்.

6. தரை மார்க்கமான வேட்டை.

இவையனைத்தும் ஆண்,பெண் இருவருக்கும் பொதுவானதாகும்.

### மேலும், ஆண்களுக்கு மாத்திரம்:

7.தலையை மறைத்தல், தலையை ஒட்டினாற்போல் மறைப்பத தடுக்கப்பட்டதாகும். ஆனால் குடை, வாகனம், கூடாரம், கட்டிடம் போன்றவைகளுக்குள் மறைவது தடுக்கப்பட்டதல்ல. இவையனைத்தும் தலையோடு ஒட்டாமல் சற்று உயரமாக இருக்க வேண்டும்.

8.தைத்த ஆடைகளை அணிவது தடுக்கப்பட்டதாகும். எனினும், கடிகாரம், பெல்ட், கண்ணாடி போன்றவற்றை அணியலாம்.

9.காலுறை அணிவது கூடாது.

சுய நினைவுடன், அறிவுடன், நிர்பந்தமின்றி மேற் கூறிய தடுக்கப்பட்ட அம்சங்களில் ஒன்றை செய்து விடும்போது அதற்குரிய பரிகாரத்தை நிறைவேற்ற வேண்டும்.

நபி வழியில் நமது உம்ராவை செய்து இறை திருப்தியை பெறுவோமாக!

visit www.islamkalvi.com